

# திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

3. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியருப்பக் காய்கவர்ந் தற்று.

4. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

5. குழல்இனிது யாழ்இனிது என்ப தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

– திருவள்ளுவர்